முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருக்குறிப்பு தொண்டர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.12.2018, திங்கட்கிழமை

1. **ஞானகுருவே அரங்கா போற்றி**
**ஞானிகளை வணங்க வழிகாட்டி**
**ஞான வரம் தரும் தேசிகா**
**ஞாலமதில் உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே உபயதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 2ம் நாள் 17.12.2018, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு திருக்குறிப்பு தொண்டர் நாயனார் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் தருமம்
ஞானபூமி ஆக்கி வருதலுற
ஞானம் தேடி அலையும் மக்கள்

4. மக்களெல்லாம் துறையூர் மண்ணின்
மாண்புகள் அறிந்து வருகவே
ஊக்கமுடன் தருமத்தின் வழி
உழைப்பு தந்து உதவிகள் செய்து

5. செய்துமே ஆசி தீட்சை பெற்று
செப்பிடவே தொடர்ந்து வர
அய்யமற தெளிவு திடம் ஞானம்
ஆற்றல் கூடி சகல வளமும் கண்டு

6. கண்டுமே ஞானியாகும் வாய்ப்பு
காணவே சைவநெறி ஏற்று
தொண்டர்களாகி சன்மார்க்க
தூயவழிகளை தொடர்ந்து வர

7. வருகவே கலியுகமே மாறும்
வருகவே கலியுகம் எங்கும்
முருகன் ஆளுமை வரும்
முழுமையான ஞான ஆட்சி மலரும்

8. மலரவே மத இன பாகுபாடு
மக்களெல்லாம் அகற்றி நன்கு
வளரும் சமத்துவ சமதர்ம
வள்ளலின் கொள்கை ஏற்று

9. ஏற்றுமே உலகோர் வருக
எங்கும் தருமம் பெருகவே
உற்றதொரு சன்மார்க்க கொள்கை
உலகை ஆளும் வெல்லும்

10. வெல்லுமே அரங்கன் தருமம்
வெல்லுமே அரங்கன் தொண்டர்படை
வெல்லுமே ஞானிகள் சபை
வெல்லுமே முருகன் ஆளுமை

11. ஆளுமை கூடி சிறக்கவே
அரங்க ஞானியை நோக்கி
வழுவாது தொண்டர்களே வாரீர்
வணங்கி வர வையகமே மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருக்குறிப்பு தொண்டர் நாயனார் அருளிய சூட்சும நூலின் சாரம் :**

அறியாமையால் சிக்கித் தவிக்கின்ற கலியுக மக்களிடம் உள்ள அறியாமை எனும் இருளை நீக்கி ஞானஒளி ஏற்றி மீட்டு காத்திடவே ஞானகுருவாக வந்துதித்த ஞானகுருவே அரங்கமகா தேசிக மகா ஞானியே போற்றி போற்றி. ஞானிகள் திருவடிகளை பற்றினால்தான் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள முடியும் என்றே மக்களுக்கு அறிவுறுத்தி ஞானிகளை வணங்கிட வழிகாட்டி ஞானிகளை வணங்கினோர்க்கு ஞானவரமும் தந்தருளும் கலியுக மீட்பின் ஞானகுருவே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 2ம் நாள் 17.12.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருக்குறிப்பு தொண்டர் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருக்குறிப்பு தொண்டர் நாயனார்.

உயர்வுமிக்க அரங்கன் ஆற்றுகின்ற அளவிலா தருமத்தினால் உலகின் தருமசக்தி பெருகி அரங்கனின் தருமபலம் இவ்வுலகை ஞானஉலகமாக ஆக்கி வருகின்றதப்பா.

ஆதலினால் ஞானத்தை தேடி உலகினில் அலைந்து திரிகின்ற மக்களே உண்மை ஞானம் விரும்பும் மக்களே அலைந்தது போதுமப்பா, இனியும் ஞானம் தேடி அலைய வேண்டாம், ஞானமே வடிவான முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கன் வீற்றிருக்கும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் மாண்புகளை அறிந்து வாருங்கள் அரங்கன் ஆசி பெற்றிட, துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து ஆங்கே உலக நலன் கருதி ஆறுமுக அரங்கன் நடத்தும் தருமங்களுக்கு பொருளுதவிகள் செய்வதுடன் உழைப்பையும் தொண்டால் தந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் பெற்றுத் தொடர்ந்து ஓங்காரக்குடிலிற்கு வரவர, அவர்க்கெல்லாம் அவர்களின் மனதில் உள்ள அய்யம் எல்லாம் தெளிந்து பயம் நீங்கி ஞானஆற்றல் கூடி சகல வளங்களையும் பெறுவார்கள். தருமபலம் பெருக்கி வாழ ஞானியாகும் வாய்ப்பினையும் பெறுவர்.

ஞானம் தேடி அலைந்து அரங்கரிடத்து தொண்டுகள் செய்திட்ட அவர்க்கெல்லாம் ஞானியாக ஆகும் வாய்ப்பையும் பெற்றிடுவார்கள். புலால் மறுத்து, உயிர்க்கொலை நீக்கி, சுத்த சைவ உணவை மேற்கொண்டு தொண்டர்களாக ஆகி செயல்பட கலியுகமே மாறுமப்பா. உலகம் எங்கும் முருகப்பெருமானின் ஞானஆட்சி உலகினில் உருவாகும்.

உலகினில் ஞானஆட்சி மலர்ந்திட உலகினில் ஜாதி, மத, இன, மொழி பாகுபாடின்றி அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக ஏற்று செயல்பட உலகம் எங்கும் தருமம் பெருகிடும், சன்மார்க்க கொள்கை உலகினை ஆட்சி செய்யும் உலகையே வெல்லும்.

ஆறுமுக அரங்கனின் தருமம் உலகையே வெல்லும்.

அரங்கரின் தொண்டர்படை வெல்லும்.

வெல்லுமே ஞானசபை ஞானிகள் சபை, வெல்லுமே முருகப்பெருமானின் ஆட்சிமுறை.

ஆளுமை கூடி சிறந்திட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொண்டர்களாக்கி உலகினை உருவாக்கி சிறப்படைய செய்வர். உலகினில் ஞானஆட்சி அமைந்திடவே உலகினில் ஆளுமைகூடி நிற்க தொண்டர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் முருகப்பெருமானின் ஆட்சி சிறந்திட வழுவாது அரங்க ஞானியின் ஆற்றல் உணர்ந்து தவறாமல் பூஜை செய்து தொண்டர்களாக ஆக்கி வணங்கிவர உலகமே மறுமலர்ச்சி அடையும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருக்குறிப்பு தொண்டர் நாயனார்.

–சுபம்–